**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**STC.No.251/2022**

**வழக்கு சாட்சி PW.9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **அறிவழகன்** | தொழில் | : அரசு மருத்துவர் |
| தகப்பனார் பெயர் | : கண்ணன் | கணவர் பெயர் | : ––––– |
| கிராமம் | : திண்டுக்கல் | இனம் | : ஆண் |
| தாலுகா | : திண்டுக்கல் | வயது | : 33/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 23.02.2026 |

**( எதிரி ஆஜரில் உள்ளார் ) , (சாட்சியம் இணையவழி மூலம் பதிவு செய்யப்பட்டது. சாட்சி திரு.அறிவழகன் என்பவர் நீதிமன்ற காவலர் திரு.அழகுராஜா அவர்களால் அடையாளம் காணப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனில் எலும்பு முறிவு பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறோன். கடந்த 04.03.2018ம் தேதி தாண்டிக்குடி மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தேன். தாண்டிக்குடி காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த அய்யனார் மகன் அருண்பிரகாஷ் என்பவர் வயது 35 என்பவர் சிகிச்சைக்கு வந்தவர் அவரை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் மரக்கட்டையால் தாக்கியதாக தெரிவித்தார். அவரை பரிசோதித்த நான், அவரது முன்தலை மற்றும் வலது முழங்கால் பகுதியில் வெட்டுக்காயம் இருந்தது . அவருக்கு ஏற்பட்டிருந்த வெட்டுக்காயத்திற்கு தையல் இட்டு சிகிக்சை அளித்தேன். அவரது தலையில் ஏற்பட்டிருந்த காயம் காரணமாக அது தொடர்பாக அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். திண்டுக்கல் அரசு மருத்துவமனை மருத்துவர் இரத்தன்

பாபு என்பவர் வழங்கிய கருத்துரையின்பேரில் நான் சிகிக்சை அளித்த அருண்பிரகாஷ் என்பவருக்கு சான்று வழங்கினேன் . நான் வழங்கிய காயச்சான்று **அ.சா.ஆ.6** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சிகிச்சைக்கு வந்த அருண்பிரகாஷ் என்பவர் காலை 09.00 மணிக்குத்தான் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான் . சிகிச்சைக்கு வந்த நேரம் காலை 09.00 மணி என குறிப்பிட்டுள்ள நிலையில் சண்டை 09.00 மணி அளவில் நடந்ததாக ஒரே நேரத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சிகிக்சைக்கு வந்த நபர் சொன்ன நேரத்தினை நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன் . விபத்து பதிவேட்டில் Pain pleeding and laceration என்ற விபரத்தை குறிப்பிட்டுள்ளேன், ஆனால் Recent nature என்ற வார்த்தையை கருத்துரையில் குறிப்பிடவில்லை . ஒரு நபர் தடுமாறி கீழே விழுந்தால்கூட மேற்சொன்னது போன்ற வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்பு உள்ளது. திண்டுக்கல் அரசு மருத்துவரின் கருத்துரை எனது பார்வைக்கு வரப்பெறாமல் காவலர்களால் நேரடியாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல , எனது பார்வைக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையின் மருத்துவர் பார்வைக்கு வைக்கப்பட்டு அதன்பேரில்தான் நான் கருத்துரை வழங்கியுள்ளேன் . காயமுற்ற அருண்பிரகாஷ் திண்டுக்கல் மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிக்சை தொடர்புடைய ஆவணங்களை பார்வையிட்டுதான் நான் கருத்துரை வழங்கியுள்ளேன்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.23 16:40:13 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.